நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.

ந.க.472/2002/எபி1.

நாள்:05.10.2002

<u>சுற்றறிக்கை</u>

பொருள்: பணிகள் – தமிழ்நாடு நகராட்சி பொறியியல் பணி– வயது முதிர்வின் காரணமாக நகராட்சி பணியாளர்களை அரசு நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பினை கணக்கிட்டு பணியிலிருந்து ஓய்வு பெறுதல் – வயது வரம்பினை மீறி கூடுதலாக பணிபுரிய அனுமதிக்கப்படும் போது– அத்தொகை பணியாளரிடமிருந்து பிடித்தம் செய்ய கூடாது– தீர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது– தொடர்பாக.

பார்வை: உயர்நீதி மன்றம் தொடரப்பட்ட வழக்கு தீர்ப்பு டபிள்யு.பி.எண்.7786/2002, நாள்.25.08.2002.

...

பார்வையில் காணும் அரக்கோணம் நகராட்சியில் சேரி மஸ்தூராக பணிபுரிந்த திரு. டேவிட், தொடரப்பட்ட உயர்நீதிமன்ற வழக்கு எண். டபிள்யு.பி.எண். 7786/2002, நாள்.25.07.2002ல் வழங்கப்பட்ட தீர்ப்பில், 58 வயதிற்கு மேல் பணிபுரிந்த காலத்திற்கு வழங்கப்பட்ட தொகையினை அவரிடமிருந்து (பணியாளரிடமிருந்து) பிடித்தம் செய்து பற்று வைக்கக்கூடாது என்றும், ஆனால் அரசு நிர்ணயம் செய்யப்பட்ட வயது வரம்பை கணக்கிட்டு ஏற்றுக் கொண்டு நாள் ஓய்வூதிய பலன்களை அனுமதிக்குமாறும் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது. (நகல் இணைக்கப்பட்டுள்ளது).

2) இது போன்ற வழக்குகளின் மீது மறு வேலை வாய்ப்பாக கருதி புதிய செயற்குறிப்பினையும், கூடுதலாக வழங்கப்பட்ட தொகையினை பணியாளரிடமிருந்து பிடிப்பு செய்வது நடைமுறையில் முறையல்ல என்றும் அவரது பணி அரசுக்கு சேவை தந்துள்ளதால் அதற்கான ஊதியத்தை பிடிப்பது சாத்தியமில்லை என்றும், பணிக்கால நீட்டிற்கு பணியாளர் பொறுப்பாகமாட்டார் என கருதப்பட்டு பணி நீட்டிப்பு செய்த அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் அந்த இழப்பினை பொறுப்பான அலுவலரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்ற அறிவுரை ஏற்கனவே இவ்வலுவலகத்திலிருந்து அனைத்து நகராட்சி ஆணையருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. (சுற்றறிக்கை எண்.ந.க.7758/2002/எபி1, நாள்.. 25.04.2002).

3) எனவே மேற்படி வழக்கில் உயர் நீதி மன்றத்தால் சுட்டிக்-காட்டப்பட்டுள்ள அனைத்து அறிவுரைகளையும் பின்பற்றி தக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து நகராட்சி ஆணையருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

4) மேற்படி அறிவுரைகளை பின்பற்றாமல் இருப்பின், அதற்கு நகராட்சி ஆணையரை முழு பொறுப்பாக்கி துறை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்படுகிறார்.

5) இதுமாதிரி நிகழ்வுகள் ஏதேனும் நகராட்சிகளில் இருப்பின், அது சம்பந்தமான பிரேரணைகள் 30.10.2002க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது. 30.10.2002க்குப்பின் வரும் பிரேரணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்றும், அதற்கான விளைவுகளுக்கான முழுபொறுப்பும் அந்தந்த நகராட்சி ஆணையரையே முழுமையாகச் சாரும் என்றும் இதன் மூலம் தெளிவாக அறிவுறுத்தப்படுகிறது. பிரேரணைகளை அனுப்பத் தவறிய நகராட்சி ஆணையர்கள் மீதும் துறை நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்படுகிறது.

6) இச்செயல்முறைகள் ஆணை கிடைக்கப் பெற்றமைக்கு உடன் ஒப்பளிப்பு வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

/ஒம்/கா.ஹிம்மத் பாட்சா,
நகராட்சி நிர்வாக ஆணையருக்காக.

பெறுநர்:
1) அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
2) அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.
3) இருப்பு கோப்பிற்கு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்,

எஸ்.ஜெ/07.10.